# ஊடகங்களுக்கு தெளிவுபடுத்தல்

**2017 ஆம் ஆண்டில் இலங்கையின் பொருளாதாரம் 3.1 சதவீதத்தால் வளர்ச்சியடைந்துள்ளது**

## இலங்கையின் தேசிய கணக்குகள் மதிப்பீடுகள்

## 2017 நான்காம் காலாண்டு மற்றும் 2017 ஆம் ஆண்டு

தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம், தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகார அமைச்சு

தொ.பே: 94-011-2147071 தொ.நகல்: 94-011-2877938 மின்னஞ்சல்: national.accounts@statistics.gov.lk

2017 ஆம் ஆண்டின் நான்காம் காலாண்டு மற்றும் 2017 ஆம் ஆண்டுக்குமான மதிப்பிடப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியும் அது தொடர்பான பொருளாதாரக் குறிகாட்டிகளும் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தால் வெளியிடப்படுகின்றது.

இலங்கையின் 2017ஆம் ஆண்டிற்கான (தை தொடக்கம் மார்கழி) மொத்த உள்நாட்டு உற்பத்தி நிலையான விலைகளில் (2010) ரூபா 9,315,488 மில்லியனை அடைந்துள்ளது. 2016 ஆம் ஆண்டுக்கான மொத்த உள்நாட்டு உற்பத்திப் பெறுமதி ரூபா 9,034,290 மில்லியனாகும்.

2017 ஆம் ஆண்டில் பொருளாதாரத்தின் நான்கு பிரதான பகுதிகளான:விவசாயம், கைத்தொழில், சேவைகள் மற்றும் உற்பத்திப் பொருட்கள் மீதான மானியங்கள் கழிக்கப்பட்ட வரிகள் நடைமுறை விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு தமது பங்களிப்பினை முறையே 7.7 சதவீதம், 27.2 சதவீதம், 55.8 சதவீதம் மற்றும் 9.3 சதவீதமாக பதிவு செய்துள்ளதுடன், இவ்வாண்டின் வளர்ச்சி வீதமானது 3.1 சதவீதமுமாகும்.

2016 ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் இலங்கை சாதகமற்ற காலநிலை நிலைமையை எதிர்கொண்டது.பொருளாரத்தின் விவசாய துறை முக்கியமாக சாதகமல்லாத காலநிலை நிலைமை காரணமாக (கடும் வறட்சியும் அத்தோடு பெரும் மழையும்) கடந்த 2 வருட காலப் பொழுதில் நாட்டின் சில மாவட்டங்களில் பெரும் தாக்கத்தை எதிர்கொண்டதன் விளைவாக விவசாய துறை மறை வளர்ச்சி வீதத்தையே காட்டுகிறது. இதன் காரணமாக விவசாய துறை 2017 ஆம் ஆண்டுக்காக 0.8 மறை வளர்ச்சி வீதத்தை பதிவு செய்கிறது.

2017 ஆம் ஆண்டின் முழுக் காலப் பகுதியில், விசேடமாக கைத்தொழில் நடவடிக்கைகள் ஒட்டுமொத்த வளர்ச்சி வீதமாக 3.9 சதவீத குறிப்பிடத்தக்க வளர்ச்சியை காட்டுவதுடன், அதேவேளை சேவைகள் நடவடிக்கைகள் முன்னைய வருடத்துடன் ஒப்பிடும்போது 3.2 சதவீதத்தாலும் அதிகரித்திருக்கின்றது.

### விவசாய துறையின் செயற்பாடு

2017 ஆம் ஆண்டில் மொத்த விவசாய துறையின் வளர்ச்சியானது 0.8 சதவீத மறைப் பெறுமானத்தையே பதிவு செய்தது. விவசாய துறையின் உப நடவடிக்கைகளுக்கிடையில், 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் சில விவசாய நடவடிக்கைகள் 2017 ஆம் ஆண்டில் மறை வளர்ச்சி வீதத்தையே பதிவு செய்துள்ளது. அவற்றுள் உப பிரிவான 'எண்ணைய் சார்ந்த பழங்களின் வளர்ச்சி தேங்காய் உள்ளடங்கலாக ' , 'காய்கறிகளின் வளர்ச்சி' , 'தானியங்களின் வளர்ச்சி','நெல் வளர்ச்சி'மற்றும்கடல் மீன்பிடி என்பன முறையே 19.5 சதவீத, 16.2 சதவீத, 10.3 சதவீத , 4.0 சதவீத மற்றும் 2.0 சதவீதங்களாகும். எனினும் சில முக்கிய விவசாய நடவடிக்கைகள் நேர் வளர்ச்சி வீதங்களை பதிவு செய்துள்ளன. அவற்றுட் சில 'காடாக்கலும் குத்திகளும்', 'நன்னீர் மீன்பிடி',''பழவகைகளின் வளர்ச்சி' 'தேயிலை வளர்ச்சி', 'இறப்பர் வளர்ச்சி', 'விலங்கு உற்பத்தி' 'வாசனைத்திரவியங்களின் வளர்ச்சி',

என்பன முறையே 22.0 சதவீத, 10.7 சதவீத, ,7.4 சதவீத, 4.9 சதவீத, 4.8 சதவீத,3.9 சதவீத, 0.5 சதவீத வளர்ச்சி வீதங்களை 2017 ஆம் காலப் பகுதியில் பதிவு செய்தது.

**கைத்தொழில் துறையின் செயற்பாடு**

இந்த வருடத்தில் கைத்தொழில் நடவடிக்கைகள் 3.9 சதவீத குறிப்பிடத்தக்க வளர்ச்சி வீதத்தை பதிவு செய்ததுடன், கைத்தொழில் நடவடிக்கைகளின் பிரிவுகளுக்கிடையில் 'கட்டடவாக்கம்' நடவடிக்கை கைத்தொழில் நடவடிக்கைகளில் குறிப்பிடத்தக்க உயர் பங்களிப்பை அளிப்பதுடன் இவ்வாண்டில் 3.1 சதவீதத்தாலும் அதிகரித்துள்ளது. இத்துடன் உப நடவடிக்கையான 'சுரங்கமகழ்தலும் கல்லுடைத்தலும்' 5.6 சதவீத வளர்ச்சி வீதத்தை பதிவு செய்துள்ளது.

2017 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் கைத்தொழில் துறை நடவடிக்கைகளின் கீழுள்ள தயாரிப்பு நடவடிக்கைகள் 3.9 சதவீதத்தால் விரிவடைந்துள்ளது. இத்துறையின் பாரிய பங்கு 'உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை உற்பத்தி ' மற்றும் 'புடவை மற்றும் ஆடையணிகள் உற்பத்தி' என்பவற்றின் மொத்த கூட்டிய பெறுமதியாலாகும். 2017 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் இவை முறையே 1.5 சதவீத 5.7 சதவீத குறிப்பிடத்தக்க வளர்ச்சியை பதிவு செய்துள்ளன. மேலும் 'இறப்பர் மற்றும் பிளாத்திக்குப் பொருட்கள் உற்பத்தி', 'அடிப்படை உலோகங்கள் மற்றும் உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்தி'கள்', , 'பொறி மற்றும் இயந்திர உற்பத்திகள்'' 8.7 சதவீதத்தாலும் 8.6 சதவீதத்தாலும் 6.7 சதவீதத்தாலும் 2016 கடைசி வருடத்துடன் ஒப்பிடுகையில் வளர்ச்சியடைந்துள்ளது. 'மின்வலு, வாயு, நீராவி மற்றும் குளிரூட்டல் வழங்கல்', இன் சேர்க்கப்பட்ட பெறுமதி இக் காலப் பகுதியை கருதும்போது 2.7 சதவீதத்தால் அதிகரித்துள்ளது.

**சேவைத் துறையின் செயற்பாடு**

முன்னைய வருடம் 2016 உடன் ஒப்பிடும் போது, 2017 ஆம் ஆண்டுக்காலப் பகுதியில் மூன்று பிரதான நடவடிக்கைகளில், சேவைத் துறைகள் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு உயர் பங்களிப்பை (55.8 சதவீத) இது வழங்குவதுடன் 3.2 சதவீத நேர் வளர்ச்சி வீதத்தை பதிவு செய்கிறது. சேவைத் துறையின் செயற்பாடு விசேடமாக பின்வரும் உப பிரிவுகளான 'நிகழ்ச்சித்திட்டமிடல் மற்றும் ஒலிபரப்பு', 'தொலைத்தொடர்பு' 'நிதிச் சேவை நடவடிக்கைகள்','மனித நல நடவடிக்கைகள்', 'காப்புறுதி நடவடிக்கைகள்', 'மொத்த மற்றும் சில்லறை வியாபாரம்' என்பன குறிப்பிடத்தக்க உயர் வளர்ச்சி வீதங்களை முறையே 13.2 சதவீத, 12.0 சதவீத, 9.4 சதவீத, 7.2 சதவீத, 5.7 சதவீத மற்றும் 3.8 சதவீதத்தை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது தாங்கி நிற்கிறது.

**2017 நான்காம் காலாண்டுக்கான செயற்பாடு**

2017 ஆம் ஆண்டின் நான்காம் காலாண்டுக்கான மொத்த உள்நாட்டு உற்பத்தி நிலையான விலைகளில் ரூபா 2,623,541 மில்லியனாக மதிப்பிடப்பட்டதுடன் 2016 ஆம் ஆண்டின் நான்காம் காலாண்டுடன் ஒப்பிடும் போது 3.2 சதவீத வளர்ச்சியை பதிவு செய்துள்ளதென தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் வெளியிடுகிறது. 2016 ஆம் ஆண்டின் நான்காம் காலாண்டுப் பகுதியில், கைத்தொழில் துறை 2.7 சதவீதத்தாலும், சேவைத் துறை 3.2 சதவீதத்தாலும் விரிவடைந்துள்ளது.. இவ்வேளையில் விவசாய துறையின் செயற்பாடு 7.1 சதவீத நேர் வளர்ச்சியை 2017 ஆம் ஆண்டின் கடைசி காலாண்டில் பதிவு செய்கின்றது.

2017 ஆம் ஆண்டுக்கான மற்றும் நான்காம் காலாண்டுக்கான தேசிய கணக்குகள் அரச அறிவித்தலின் வெளியீட்டின்படி, தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் 2017 ஆம் ஆண்டுக்கான தேசிய கணக்குகள் மதிப்பிடலின் மேலதிக விபரங்கள் திணைக்களத்தின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. www.statistics.gov.lk

*கலாநிதி. ஏ. ஜே. சதரசிங்க*
*பணிப்பாளர் நாயகம்*
*தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்*